Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரமோதூத ஹூ பங்குனி ௴ 12 உ செவ்வாய்க்கிழமை [26-03-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 119

# தீர்வுக்கு யோசனை அரசு தயாரிக்கிறது!

## அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தையாம்

கொழும்பு, மார்ச் 26

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண புதிய யோசனை ஒன்றை அரசாங்கம் தயாரித்து வருகின்றது என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

புதிய யோசனை, தற்போதைய மாகாண சபை முறையை விட கூடிய அதிகாரப் பரவலாக்கலைக் கொண்டதாக இருக்கும் என்றும் அச்செய்திகள் தெரிவித்தன.

புதிய யோசனையின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த அரசு விரும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்க உயர் வட்டாரங்கள் புதிய யோசனையைத் தயாரிக்கும் முயற்சியில் சுறுசுறுப்புடன் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யோசனை தயாரிக்கப்பட்டதும் ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் அது சமர்ப்பிக்கப்படும் என்றும் —

உயர்மட்ட அமைச்சர்களுடன் கலந்தாலோசித்து அந்த யோசனையை அவர் அங்கீகரிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய யோசனையில் இடம் பெறக் கூடிய முக்கிய அம்சங்கள் குறித்து தகவல் ஏதும் வெளியாகவில்லை.

[மேலும் விவரமான செய்தி 3 ஆம் பக்கத்தில்]

## தூதரகங்கள் முன் மக்கள் படையெடுப்பு

கொழும்பு, மார்ச் 26

கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களின் முன்னால் அதிகாலை முதலே மக்கள் படையெடுக்கத் தொடங்கி விடுகின்றனராம்.

ஐரோப்பிய மற்றும் மேற்கு நாடுகளின் தூதரகங்கள் முன்னால் விஸா பெறுவதற்காக மக்கள் முட்டி மோதிக் கொள்கின்றனர். கூட்டத்தைச் சமாளிக்க பொலீஸார் தடியடி நடத்துவது வழமையான நிகழ்ச்சியாகி விட்டது.

இதேவேளை 'செல்வாக்கு மிக்க' சிலர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## திருப்பழுகாமத்தில் ஞாயிறு 150 அப்பாவிகள் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 26

பெரியபோரதீவு முகாமில் இருந்து கடந்த ஞாயிறு காலை 6 மணியளவில் வெளியேறிய இராணுவத்தினரும் ரெலோ இயக்கத்தினரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள திருப்பழுகாமம் கிராமத்தைச் சுற்றி வளைத்தனர். அப்போது 150 பொது மக்களைக் கைது செய்து, பெரிய போரதீவு முகாமுக்குக் கூட்டிச் சென்றனர்.

அங்கு அவர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர்.

கைதானவர்களில் 9 பேரை முகாமில் தடுத்து வைத்து விட்டு, ஏனைய 141 பேரை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். வாசிகள் கடவுச்சீட்டு கொழும்பில் தயார் நிலையில்

### கடிதம் கொடுத்துப் பெறலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

கடவுச்சீட்டுப் பெறுவதற்காகத் தமது விண்ணப்பங்களை யாழ். அலுவலகத்தில் சமர்ப்பித்த பலரின் கடவுச்சீட்டுகள் கொழும்பில் தயாராக உள்ளன.

இப்போதைய போக்குவரத்துக் கஷ்டங்கள் காரணமாக அவற்றை நேரில் சென்று பெறமுடியாதவர்கள் தமக்கு நம்பிக்கையான இன்னொருவர் மூலம் பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் தமக்குத் தெரிந்தவரிடம், கடவுச்சீட்டை கொடுக்குமாறு ஒரு கடிதத்தை எழுதி அதில் தமது கடவுச்சீட்டு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சிமெந்துக் கூட்டுத்தாபன சிற்றூழியர்கள் இடமாற்றம்

### பிரதிநிதி குழு கொழும்பு விரைவு

காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபன சிற்றூழியர்களும் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டடவேலை செய்வோர் [மேசன்], தச்சுவேலை செய்வோர் மற்றும் தொழில்நுட்ப வேலைகளில் ஈடுபட்டு வந்தோருக்கே திடீர் இடமாற்ற உத்தரவு கிடைத்துள்ளது.

இந்த இடமாற்றம் தொடர்பாக தலைமையகத்துடன் நேரடியாகப் பேசித் தீர்வு காணுவதற்காக இங்கிருந்து பிரதிநிதிகள் குழு ஒன்று நேற்று கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றது,

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நயினாதீவு கடற்படையின் கெடுபிடிகள் அதிகரிப்பு

புளியங்கூடல், மார்ச் 26

நயினாதீவு கடற்படைமுகாமில் தற்போது கெடுபிடிகள் அதிகரித்துள்ளன,

படையினரால் சந்தேகத்துக்குரிய பயணிகள் தடுத்து வைக்கப்படுகின்றனர். சில சமயங்களில் அடையாள அட்டைகளும் பறிமுதல் செய்யப்படுகின்றன.

கடந்த சனிக்கிழமை நயினாதீவில் இருந்து யாழ். நோக்கி வந்த இளம்பெண் ஒருவர் படையினரின் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன் அவரின் அடையாள அட்டையும் பறிமுதல் செய்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சிமெந்துக்கு அனுமதி இல்லை:

## யாழ். பல்கலைக் கழக கட்டட வேலைகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ். பல்கலைக் கழகத்தின் அவசர கட்டட வேலைகளை ஆரம்பிக்கத் தேவையான கட்டடப் பொருள்களை எடுத்துவர அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கூட்டுப்படை தலைமையகம் இதற்கான அனுமதியை வழங்குவதற்கு மறுத்துவிட்டதாம்.

எனினும் கிளிநொச்சி விவசாய பீடத்தைச் சீரமைப்பதற்குத் தேவையான 5 மெற்றிக் தொன் முட்கம்பி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில் படையினர் நேற்று கடும் கெடுபிடி

யாழ்ப்பாணம், மார்ச் 26

கொழும்பில் இருந்து வவுனியாவுக்கு வந்த பயணிகள் ரயில் நிலையத்தில் வைத்து கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பயணிகளின் பொதிகள் கண்டபடி கிளறி எடுக்கப்பட்டு நுணுக்கமாகப் பரிசோதிக்கப்பட்டன.

இதனால் பயணிகள் பெரும் கஷ்டம் அடைந்ததாக நேற்றிரவு யாழ். வந்து சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

[ஒ-3]

## ராணுவ சூட்டுக்கு பெண் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

காங்கேசன்துறை இராணுவ 'சென்றி'யில் இருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் வீட்டில் இருந்த குடும்பப் பெண் ஒருவர் காயமடைந்தார்.

கீரிமலையைச் சேர்ந்த கந்தசாமி ஜெயலலிதா என்னும் பெண்ணே காயமடைந்தவர் ஆவார்.

[ஒ-3]

## நிறுத்தமாம்

சென்னை, மார்ச் 26

இலங்கைப் போராளிகள் கடல் மார்க்கமாக தமிழகத்திற்குள் நுழைவது முற்றாக நிறுத்தப்பட்டு விட்டதாக தமிழ்நாடு பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பி. ரங்கசாமி நேற்றுத் தெரிவித்தார்.

## மீண்டும் கேரதீவுக்கு பஸ் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 26

கடந்த சில தினங்களாகத் தடைப்பட்டிருந்த கேரதீவு பஸ் சேவை நேற்று மீண்டும் ஆரம்பமானது.

அதனை அடுத்து நேற்று யாழ். முத்திரைச் சந்தையில் இருந்து ஏராளமான பயணிகள் புறப்பட்டுச் சென்றனர்.

[ஒ-5]

## பலாலி இராணுவத்தினர் நேற்று ஷெல் தாக்குதல்

பலாலி இராணுவத்தினர் நேற்று விட்டு விட்டு ஷெல் தாக்குதல்களை நடத்திக் கொண்டே இருந்தனர்.

அனேக ஷெல்கள் தெல்லிப்பளை, கட்டுவன், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவும் ஏழாலை, குப்பிளான், தெல்லிப்பளைப் பகுதிகளை நோக்கி ஷெல் வீச்சு நடத்தப்பட்டது.

வீமன்காமம், கட்டுவன் பகுதிகளில் சரமாரியான வேட்டுச் சத்தங்களும் கேட்டன.

[ஒ-68]

## முச்சந்தி முரளி



புதுப் புது யோசனை எண்டு புருடா விடுவினம்...!

## புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் வந்தன

எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவிருக்கும் 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்று இரவு கேரதீவுக்கு வந்து சேர்ந்தன.

அவற்றை நேற்றிரவே அங்கிருந்து யாழ். எடுத்து வருவதற்கு ஏற்பாடாகியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் இந்த வினாத்தாள்கள் லொறி ஒன்றின் மூலம் கொண்டுவரப்பட்டன.

இதேசமயம் யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கு இரண்டு லட்சம் கொப்பிகள் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் தெரியவந்தது.

[உ-3]

## இந்திய விமானம் நொருங்கி 28 படையினர் மரணம்

கர்நாடக மாநிலம், பெங்களூர் அருகே இந்திய விமானப் படைக்குச் சொந்தமான போக்குவரத்து விமானம் ஒன்று நேற்றுக் காலை நொருங்கி விழுந்ததில் 28 விமானப்படை வீரர்கள் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் மூவர் அதிகாரிகள். ஏனையோர் பயிலுநர் அதிகாரிகள் என்று அறிவிக்கப்பட்டது. [ஒ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சிங்கர் தையல் இயந்திரங்கள் உதிரிப்பாகங்கள் விற்பனையாளரும், திருத்துபவர்களும் கௌரி தொழிலகம், இல. 531, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [ஆஸ்பத்திரி முன்பாக] [16218]

### வினாத்தாள் விற்பனை

ஆண்டு 5 [புலமைப்பரிசில் பரீட்சைக்கான] கணிதம், தமிழ்மொழி ஆகிய பாடங்களுக்குரிய வினாத்தாள்கள் [புள்ளியிடும் திட்டம், விடைகளுடன்] விற்பனைக்குண்டு. Bond Institute, 58 A, பிரான்லி வீதி, யாழ்ப்பாணம். [16215,

### தேவை

இலுப்பை அரைப்பு தேவை. மில்க்வைற். [இ-5882]

பாவித்த சம்போ, ஓடிக்கலோன், Gum [கம்] Vicks போத்தல், பவுடர் டப்பா, போல்ப்பொயின்ட் பேனா சனிக்கிழமைகளின் மட்டும் காலை 9 மணி முதல் 12 மணி வரை வாங்கப்படும். S. சக்திபன் 55, மணிக்கூண்டு வீதி, கொழும்பு சிருடியோ பின்புறம், யாழ்ப்பாணம். [இ-5867]

### சோதிடமாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். ''சக்தி சரவணா'' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம் 8 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [16179]

### மாணவர் அகராதி

வரதர் மாணவர் அகராதி ஆங்கிலம் - தமிழ்! ஆங்கிலம் பயில்வோருக்கு அரிய துணை நூல். 18,400 சொற்கள் கொண்டது நல்ல தமிழில் கருத்துக்கள். மலிவு விலை ரூபா 95 மட்டுமே எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். தொகையாகப் பெறுவதற்கு ஆனந்தா புத்தகசாலை 226, காங்கேசன்துறை வீதி, & பூபாலசிங்கம் புத்தகசாலை. பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [16198]

### தவறிவிட்டது

18-3-91 அன்று சங்குப்பிட்டியில் வவுனியா செல்லும் மினிபஸ்ஸில் எனது கடவுச்சீட்டு, காசோலைப் புத்தகம், நாட்குறிப்புக்கள், மூக்குக் கண்ணாடி, பிரஜா உரிமைப் புத்தகம், மகனின் அடையாள அட்டை, வைப்புச் சான்றிதழ்கள் என்பன அடங்கிய கைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்திலோ அல்லது வே. குணநாயகம் 105, பகையிரத நிலைய வீதி, கொக்குவில் கிழக்கு என்னும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். சன்மானம்வழங்கப்படும். [16189

### சிக்மா பம்ஸ்

உங்கள் நீர் இறைக்கும் இயந்திரங்களை அதி விரைவில் திருத்தி புனரமைத்துக் கொள்ளவும், உதிரிப் பாகங்கள் வாங்கவும் நாடுங்கள். யுனைட்டட் அக்றோ என்ஜினியரிங் 274/1, ஆஸ்பத்திரி வீதி, [பெரியாஸ்பத்திரி முன்பாக] யாழ்ப்பாணம். [சி-4807]

---

# முக்கிய அறிவித்தல்

ஆர். வி. ஜி. பீடி பெயரில் போலி பீடிகள் விற்பனை செய்யப்படுவதாக அறிய வந்துள்ளோம். போலி ஆர். வி. ஜி பீடிகள் விலையிலும், தரத்திலும் குறைந்தவை என்பதை பாவனையாளர் கவனத்திற்கு அறியத்தருகிறோம்.

அசல் ஆர். வி. ஜி பீடிகள் எமது ஸ்தாபன வாகனங்கள் மூலமே விற்பனை செய்யப்படுகின்றன.

குறைந்த விலையில் விற்பனையாகும் போலி ஆர். வி. ஜி. பீடிகளை வாங்கி ஏமாறாதீர்கள்.

போலி ஆர். வி. ஜி. பீடி விற்பனையாளர் பற்றிய தகவல்கள் வரவேற்கப்படும்.

**ஆர். வி. ஜி. நிர்வாகம்**
58, குறுக்குத் தெரு
நல்லூர், யாழ்ப்பாணம்.
[16167]

---

# நீங்காத நினைவில்
## 5 ஆம் ஆண்டு



மலர்வு:
16 - 4 - 1941

உதிர்வு:
21 3 - 1986

திதி:
26 - 3 - 1991

அமரர்
## செல்லப்பா இரத்தினசபாபதி
(பத்தர்)

பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய் விளங்கிய நீங்கள் எம்மைவிட்டு பிரிந்து ஐந்து ஆண்டுகள் சென்றாலும், உங்கள் நினைவு எம்மை விட்டு எம் உயிர் உள்ளவரை நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாதிரிகோவிலடி,
கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்

[3890]

---

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் வ. வ. கயிலாசபிள்ளை
[கொக்குவில், கோண்டாவில்
முன்னைநாள் கிராமசபை உறுப்பினர்]

தோற்றம்:
8 - 12 - 1922

மறைவு:
28 - 03 - 1988

எங்கள் அன்புத் தெய்வமே! எங்களை விட்டுப் பிரிந்தீர்களே! நாம் என்றும் உங்களை நினைத்தே துயர் உருகுகின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

கமலாம்பிகா பவனம்
கோண்டாவில் வடக்கு.
[16193]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

# S. L. E. A. S.
(Open & Limited)

## துரித பயிற்சி வகுப்புகள்

பாடங்கள்:

1. நுண்ணறிவு
2. கிரகித்தல்
3. கல்வி நிர்வாகம் பற்றிய நிகழ்வுக் கற்கை

கல்விச் சேவையிலுள்ள விரிவுரையாளர்கள்

**ஆரம்பம்: 30-03-1991**
8-30 மணி

முழுக்கட்டணம்: 250/-

- ★ Limited Number in Each Class
- ★ அச்சடித்த பாடக் குறிப்புகள் இலவசம்
- ★ மாதிரி வினா விடைகள் இலவசம்

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

[O. L. R. தேவாலய மேற்குப் பக்கம்]
16, 3 rd CROSS STREET,
JAFFAN.
[சி 5886]

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு:
15 - 10 - 1909

இறப்பு:
24 - 02 - 1991

திருமதி
## ஞானம்மா சுப்பிரமணியம்

'கிறிஸ்து எனக்கு ஜீவன், மரணம் எனக்கு ஆதாயம்'
உயிர்த்தெழுதலும் ஜீவனும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
மரித்தாலும் பிழைப்பான்

தங்கள் பிரிவால் வருந்தும்!
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உறவினர், நண்பர்கள்.

ஞானவாசம்,
பொலிஸ் லேன், சாவகச்சேரி.
[16222]

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு: | மறைவு: |
|---|---|
| 16 | 24 |
| — | — |
| 04 | 02 |
| — | — |
| 1939 | 1991 |

## கணபதி கம்பிராஜா
[இளைப்பாறிய பிராந்திய பொறியியலாளர்]

எம் இதயக் கோவிலில்
என்றென்றும் - நீர் இருப்பீர்
பிரிவுறு துயர் சுமந்திங்கு - தினமும்
கண்ணீர்ப் பூக்களால் - அர்ச்சித்து நிற்கின்றோம்.
காலங்கள் உள்ள வரை
கனன்று நிற்கும் - உமதன்பு - உமதுணர்வு.

நின் பிரிவுத் துயரில் துவளும்!
மனைவி, மக்கள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

கோயிட்டி லேன்,
இளவாலை.

முக்கிய குறிப்பு: வான்புகு வழியனுப்பு நிகழ்ச்சியில் நேரில் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைவிலிருந்து அனுதாபத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், இன்னும் பல வகையில் உதவி ஒத்தாசைகள் புரிந்த சகலருக்கும் எம் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். [16203]

## உதயன்

### நற்சகுனம் சரிவருமா?

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையை முன்னிட்டு, அன்றைய தினமும், அதற்கு முதல், நாளும் ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக அறியவந்துள்ளது.

பிரஸ்தாப பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கும், அவர்களின் பெற்றோர்களுக்கும் இச் செய்தி வயிற்றில் பால் வார்த்தது போல இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

உத்தேசிக்கப்பட்டவாறு எதிர்வரும் 30 ஆம் திகதி பரீட்சை நடைபெற வேண்டுமானால், பச்சிளம் குழந்தைகள் மனப் பயமோ, பதற்றமோ இன்றி அதனை எழுதுவதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். எந்த நேரத்திலும் விமானம் வரக்கூடும், குண்டு போடக்கூடும் அல்லது ஷெல் வந்து விழலாம், அல்லது இராணுவம் நிலைகொண்டுள்ள இடங்களில் பரீட்சைக்குப் போகும்போது விபரீதம் எதுவும் நிகழலாம் என்ற மனபயம் இருந்தால் பிஞ்சுக் குழந்தைகளால் அமைதியாகப் பரீட்சை எழுதமுடியுமா? தமது திறமையைத் தான் காட்ட இயலுமா?

மாணவர்கள் எவ்வித உளத் தக்கமோ, அச்சமோ இல்லாமல் தமது மனதை முழுதாகச் செலுத்தி பரீட்சை எழுத வேண்டுமானால், அன்றைய தினம் இராணுவ நடவடிக்கைகளும், நடமாட்டங்களும் தவிர்க்கப்பட வேண்டும்.

அதனை உணர்ந்து அரசாங்கம் யுத்த நிறுத்தம் ஒன்றைக் கடைப்பிடிக்க முன்வந்திருப்பது வரவேற்கப்பட வேண்டியதாகும். இம்முறை பரீட்சைக்கான விசேட யுத்த நிறுத்தத் திட்டம் வெற்றி அளித்தால், ஏப்ரல் 22 ஆம் திகதி முதல் மே 15 வரை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சையின் போதும் மூன்று வார கால யுத்தநிறுத்தம் ஒன்றை அரசு மேற்கொள்ளும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்கத்தின் இந்தத் தன்னிச்சையான யுத்த நிறுத்த முடிவைக் கேட்கும் தமிழர் எவருக்கும் ஒரு சந்தேகம் எழவே செய்யும். தமிழ் மாணவர்களின் கல்வியில் திடீரென அரசுக்கு அக்கறை வந்துவிட்டதா என்று அதிசயப்படத் தோன்றும்.

இந்த முடிவுக்குப் பின்னால் ஓர் அரசியல் பின்னணி, அதாவது அரசியல் கருத்து மாற்றம் ஒன்று இருக்க வேண்டும். இல்லையேல் தமிழ் மாணவர் கல்வியை, அவர்களின் பரீட்சையைத் தாம் குழப்ப விரும்பவில்லை என்று வெளி உலகுக்குக் காட்டிக்கொள்ள அரசு நினைத்திருக்க வேண்டும்!

எது எப்படியோ, யுத்தத்தில் சம்பந்தப்பட்ட அடுத்த தரப்பினரான தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மாணவர்கள் பரீட்சையை அமைதியான சூழலில் எழுதுவதை பெரிதும் விரும்பி வரவேற்பார்கள். தமிழ் மாணவர்களின் கல்வி எந்தவிதத்திலும் பாதிப்படைந்துவிடக்கூடாது என்பதில் அக்கறை உள்ளவர்கள் அவர்கள்.

அந்த வகையில் புலமைப் பரிசில் பரீட்சை அமைதியாக நடக்க வழி பிறந்துள்ளது நற்சகுனமே என்று தோன்றுகிறது. அரசாங்க மேலிடம் ஒன்றைச் சொல்ல, கீழ் மட்டம் அதற்கு எதிர்மாறாக நடந்து கொள்ளாமல் இருப்பதிலேயே அந்த நற்சகுனத்தின் அறுவடை தங்கி உள்ளது.

2 ஆலைகளும் செயற்படாததால்

# 1,300 தொன்னுக்கு மேல் சிமெந்து உற்பத்தி பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26

காங்கேசன்துறை சிமெந்து ஆலைகள் இயங்காததால் மூன்று லட்சம் தொன் சிமெந்து உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் இயங்கிய இரு ஆலைகளும் தினமும் 1,300 தொன்னுக்கு மேல் உற்பத்தி செய்து வந்தன.

தற்போது ராணுவ நடவடிக்கைகள் காரணமாக இந்த இரு ஆலைகளும் முற்றாகச் செயல் இழந்துள்ளன.

இதனால் யாழ் மாவட்டத்தில் சிமெந்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. குண்டு வீச்சினால் ஏற்பட்ட சேதங்களை, திருத்த முடியாத நிலையில் பலர் திண்டாடுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-3]

## விளக்கு வெடித்துசிறுமி பலி

விளக்குக்கு மண்ணெண்ணெய்க்குப் பதிலாக பெற்றோல் விட்டபோது விளக்கு வெடித்து வீடு தீப்பற்றிய போது மகள் பலியானார். தந்தை பலத்த எரிகாயங்களுக்கு உள்ளானார்.

இச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை கோண்டாவில் டிப்போவுக்கு அண்மையில் இடம்பெற்றது.

அமிர்தலிங்கம் அமிர்தகரசி என்பவரே பலியானவராவார் தந்தையான அமிர்தலிங்கம் எரிகாயங்களுக்குள்ளானார். [இ- 117]

## ஈழகேசரி பொன்னையா நினைவுதினம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

குரும்பசிட்டி சன்மார்க்க சபை இம்மாதம் 31ஆம் திகதி ஞாயிறு காலை 9-00 மணிக்கு ஈழகேசரி நா. பொன்னையாவின் நாற்பதாவது நினைவு தினத்தை அனுஷ்டிக்கிறது.

இந்த வைபவம் நல்லூர் கம்பன் கோட்டத்தில் கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் நடைபெறும். கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி நினைவுப் பேருரை நிகழ்த்துவார். [இ]

## இறங்குதுறை புனரமைப்பு வேலை

யாழ்ப்பாணம், மார்ச் 26

பருத்தித்துறை இறங்குதுறை மேலும் 60 அடி தூரத்துக்கு புனரமைக்கப்படவிருக்கிறது. புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. [இ-3]

## வீடு தீப்பிடித்து மூவர் காயம்

தென்மராட்சி, மார்ச் 26

நடுநிசி வேளையில் வீடு தீப்பற்றி எரிந்தபோது வீட்டுக்குள் படுத்திருந்தவர்களை காப்பாற்றிய மூவர் பலத்த எரிகாயங்களுக்குள்ளாகி சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இச் சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு சாவகச்சேரி - கச்சாய் வீதியில் இடம்பெற்றது.

த. இரகு [வயது 26] பொ. பொன்னுத்தம்பி [வயது 22], அ. ஸ்ரீகாந்தன் [வயது 19] ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

இவர்கள் பின்பு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

குப்பி விளக்கு மூலம் வீடு தீப்பிடித்ததாகக் கூறப்படுகிறது. [இ-117]

## வங்கி வெற்றிடங்களுக்கு வடக்கு - கிழக்கில் பரீட்சை

கொழும்பு, மார்ச் 26

அரச வங்கிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கென பரீட்சைத் திணைக்களம் வடக்கு—கிழக்கு மாகாணத்துக்கெனத் தனியான பரீட்சை நடத்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நாட்டின் ஏனைய பகுதிகளில் நடத்தப்பட்ட இப்பரீட்சை வடக்கு கிழக்கு மாகாணத்தில் நடத்தப்படவில்லை என்றும்—

அதன் காரணமாகவே தனியான பரீட்சையை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கொள்கை திட்டமிடல் அமைச்சின் பணிப்பாளர் டாக்டர் இராமானுஜம் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக் கழகம், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் மூலம் இதப் பரீட்சையை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இத்திட்டத்திற்கு மேற்படி பல்கலைக் கழக உபவேந்தர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்ட மாணவர்கள் யாழ்ப்பாணத்திலேயே பரீட்சை எழுதவேண்டிவரும்.

இப்படி டாக்டர் இராமானுஜம் மேலும் சொன்னார்.

இதேவேளை — வடக்கு, கிழக்கு மாகாணங்களில்உள்ள அரச வங்கிக் கிளைகளில் 300க்கு மேற்பட்ட வெற்றிடங்கள் உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

மூடப்பட்டு உள்ள வங்கிகளில் பணியாற்றிய ஊழியர்களைக்கொண்டே இவ்வெற்றிடங்கள் தற்போது தற்காலிகமாக நிரப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

## 12 தமிழ் இளைஞர் விடுதலை

யாழ்ப்பாணம், மார்ச் 26

ஒரு மாதத்துக்கு மேல் மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 12 தமிழ் இளைஞர்கள் கடந்த வெள்ளியன்று விடுலை செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்த இந்த இளைஞர்கள் வவுனியா பொலீஸ் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டு அங்கு வைத்தே விடுதலை செய்யப்பட்டனர். [இ-3]

## கட்டுநாயக்காவிலும் தமிழரிடம் பணம் பறிப்பு

### தமிழ்க் குழுவினர் அட்டகாசம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து தமிழரிடம் இருந்து பணம் மற்றும் ஆடம்பரப் பொருள்கள் போன்றவை பறித்தெடுக்கப் படுகின்றனவாம்.

கொழும்பிலுள்ள தமிழ்க் குழு ஒன்றைச் சேர்ந்த இளைஞர்களே இப்படியான அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வருவதாகப் புகார் கூறப்படுகிறது.

தமிழ்க் குழுவினருக்கு அங்கு கடமையில் இருக்கும் பொலிஸார் உதவி புரிந்து வருகின்றனராம்.

அண்மையில் வெளிநாட்டில் இருந்து வந்த பளைப் பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் இரண்டு லட்சம் ரூபா பெறுமதிமிக்க பணம் மற்றும் பொருள்கள் பறிக்கப்பட்டதாகவும்—

இது குறித்து பொலீஸாரிடம் முறையிடச் சென்ற வேளையில் சம்பந்தப்பட்டவர் பொலீஸாரின் தாக்குதலுக்கு இலக்கானதாகவும் தெரிவிக்கப்படுகிறது [இ 72]

## மீன்பெட்டிக்குள் இருந்தே குண்டுகள் வெடித்தனவாம்

கொழும்பு, மார்ச் 26

அக்கரைப்பற்று மீன்சந்தையில் ஞாயிற்றுக்கிழமை காலை வெடித்த குண்டுகள் சைக்கிள் ஒன்றில் கட்டப்பட்டிருந்த மீன் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்தன என்று கூறப்படுகிறது.

உயிரிழந்தவர்கள் அனைவரும் ஆண்கள் என்றும் காயமடைந்தவர்களில் 20 பேர் ஆபத்தான நிலையில் அம்பாறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது

பத்துக்கு மேற்பட்டோர் அக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் கொல்லப்பட்டனர் என்று இலங்கை வானொலி அறிவித்த போதும், கொழும்பு பத்திரிகைகள் உயிரிழந்தோரின் எண்ணிக்கை குறித்து முரண்பட்ட தகவல்களை வெளியிட்டுள்ளன.

## ஈராக்கின் 150 விமானங்கள் ஈரானினால் பறிமுதல்

தெஹ்ரான், மார்ச் 26

வளைகுடாப் போரின் போது ஈரானில் தரை இறங்கிய 150க்கு அதிகமான ஈராக்கிய போர் விமானங்கள் மற்றும் சிவில் போக்குவரத்து விமானங்களை தாம் பறிமுதல் செய்திருப்பதாக ஈரான் அரசு அறிவித்துள்ளது.

பன்னாட்டுப்படைகள் நடத்திய விமானத் தாக்குதல்களில் சேதமடையாது காப்பாற்றுவதற்காக ஈராக் அவ் விமானங்களை ஈரானுக்கு அனுப்பி வைத்தது.

வளைகுடாப் போர் முடிவடைந்த பின்னர் ஈராக்கில் உள்நாட்டுக் கலவரம் தற்போது தீவிரமடைந்து வரும் இச் சமயம் ஈரானின் பறிமுதல் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. ஈரான் - ஈராக்கிய இராஜதந்திர உறவில் மீண்டும் பெரிய விரிசலை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஈரானின் அறிவிப்பை அமெரிக்கா வரவேற்றுள்ளது. [இ எ]

# இனப்பிரச்சினை தீர்வு யோசனை: அரசு தனித்து தயாரிக்க முயற்சி

கொழும்பு, மார்ச் 26

இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றை சொந்தமாக அரசாங்கமே தயாரிக்க முற்பட்டிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன

சிரேஷ்ட அமைச்சரும் ஐக்கிய தேசியக்கட்சியில் முக்கிய பதவி வகிப்பவருமான ஒருவர் அரச தலைமைப் பீடத்தின் அனுமதியுடன் இம் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் என்று கூறப்படுகிறது.

ஆளும் கட்சியின் முக்கிய தமிழ் அரசியல்வாதி ஒருவரும் இந்த பணியில் ஒத்துழைத்து வருகிறார் என்றும் சொல்லப்படுகிறது.

தற்போதைய மாகாண சபை முறையை விட தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதான ஒரு தீர்வு ஒன்றை அரசின் சார்பில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது:

இந்த தீர்வின் அடிப்படையில் தான் விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுக்களை நடத்த விரும்பும் என்றும் தெரிய வருகிறது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண யோசனை ஒன்றை முன்வைக்குமாறு ஜனாதிபதி பிரேமதாஸா கொழும்பில் உள்ள தமிழ் முஸ்லிம் கட்சிகளை கேட்டிருந்தார் என்பதும் —

கடந்த நான்கு மாதங்களாக அக்கட்சிகள் இம் முயற்சியில் ஈடுபட்டிருந்தும் இணக்கமான ஒரு நிலை அக்கட்சிகளிடையே எட்டப்படவில்லை என்பதும் தெரிந்ததே.

அதனைத் தொடர்ந்தே சொந்தத் தீர்வு ஒன்றைத் தயாரிக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

உள்ளூராட்சித் தேர்தல் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வது முடிவடைந்த பின்னர் தான் அரசு இம் முயற்சியிலும், சமாதான முயற்சிகளிலும் தீவிரமாக ஈடுபடும் என்று ஐ. தே. க. உயர்மட்ட வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இதனிடையில் - வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் தொடர்பு கொண்டு தனது பங்களிப்பைச் செய்யும்படி ஆளும் ஐ. தே. க. பிரமுகர்கள் சிலர் அமைச்சர் தொண்டமானை வற்புறுத்தி வருகின்றனர் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-எ]

## இ. காங்கிரஸ் ஜனதாதள் (எஸ்) கூட்டு இல்லை

லக்னோ, மார்ச் 26

இந்திரா காங்கிரஸுடன் [ராஜீவ் காந்தியுடன்] ஜனதா தள் [எஸ்] கட்சி எவ்வித உறவையும் வைத்துக்கொள்ளாது என்று கட்சித் தலைவரும் பிரதமருமான திரு. சந்திரசேகர் தெரிவித்தார்.

திரு. ஓம் பிரகாஷ் சௌதாலா மீண்டும் முதலமைச்சரானது பற்றி கருத்து வெளியிடுகையில்—

ஹரியானா மாநில சட்டசபையில் உள்ள ஜனதா தள் [எஸ்] எம், எல். ஏக்கள் அரசியல் சாசனப்படி தமக்குள்ள உரிமைகளை நிலைநாட்டி உள்ளனர்- என்றும் பிரதமர் சந்திரசேகர் சொன்னார். [ஒ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கப் படை விலக பத்து மாதங்கள் செல்லும்!

வாஷிங்டன், மார்ச் 26

வளைகுடாவில் உள்ள அமெரிக்கப் படைகள் அங்கிருந்து வாபஸாவதற்கு பத்து மாதங்கள் செல்லும் என்று அமெரிக்கத் தளபதி அறிவித்திருக்கிறார்.

குவைத் தனது பகுதியில் அமெரிக்க இராணுவத் தளம் ஒன்றை வைத்திருக்க விரும்பினால் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் அமெரிக்க ஜெனரல் தெரிவித்தார். [அ]


கொக்குவில் — நந்தாவில்

கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய

புனராவர்த்தன, பிரதிஷ்டா

மஹா கும்பாபிஷேகம்

27-3-91 புதன் காலை 6-14 மணிமுதல்

நடைபெறும். [15937]

ஓம்

விராட்விஷ்வப் பிரம்மனே நம

## பூப்புனித நீராட்டு விழா

## ★ அழைப்பிதழ் ★

அன்புடையீர்!

நிகழும் பிரமோதூத வருடம் பங்குனி மாதம் 14 ஆம் நாள் [28-03-91] வியாழக்கிழமை காலை 6-14 மணி தொடக்கம் 7-02 மணியளவில் வரும் மேட லக்கின சுப முகூர்த்த வேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரி

திருவளர் செல்வி

ராஜபாமினி [சிந்து]

அவர்களுக்கு

பூப்புனித நீராட்டு விழா நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

கி. கந்தசாமி குடும்பத்தினர்.

ஆறுகால்மடம் லேன்,
ஆனைக்கோட்டை. [16217]

## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

O/L

DEC. 91. பிரிவு 2

Day Classes
[8-30 — 1-30]

Evening Classes
[3-00 — 5-40]

ஆரம்பம்: 27 - 03 - 1991

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | |
|---|---|
| விஞ்ஞானம்:- | திரு. J. R சூரி |
| கணிதம்:- | திரு. மதீ |
| தமிழ்.- | திரு. திருப்பதி<br>திரு. தர்மகுலசிங்கம் |
| சமயம்:- | திரு. சங்கர் |
| ஆங்கிலம்:- | திரு. விஸ்வநாதன் |
| சமூகக்கல்வி:- | திரு. கோபி |
| வர்த்தகம்:- | திரு கருணாகரன் |

[சி/5880]

விஞ்ஞான மாமேதை

பேராசிரியர் சோ. கந்தையா

அவர்கட்கு

## கண்ணீர் அஞ்சலி

உயிரை நினைந்து உடலைச் சுமந்து
பலர் ஓடும் வேளை
பயிரை நினைந்து உடலை மறந்து
நீவிர் செல்லும் வேளை......?
தாங்க முடியவில்லையே!

ஐயா! எம்மண் என்றும் உங்களை மறவாது

உங்கள் பயிர்கள்

நியூ சயன்ஸ் அக்கடமி,
யாழ்ப்பாணம்.

[C/5888]


## குன்றன் வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

மணலாறு பகுதியில் கடந்த ஞாயிறன்று நடந்த வெடிவிபத்து ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி குன்றன் [சுப்பிரமணியம் குமாரவேல் — புளியம்பொக்கணை, கிளிநொச்சி] வீரமரணமடைந்தார். [ஒ எ]

## அத்வானி போட்டியிடார்

புதுடில்லி, மார்ச் 26

பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் திரு. எல். கே. அத்வானி எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறார்.

பஞ்சாப், அஸ்ஸாம், காஷ்மீர் மாநிலங்களில் தேர்தலை நடத்த காபந்து அரசாங்கத்துக்கு அதிகாரம் எதுவும் இல்லை என்றும்—

அதனை தீர்மானிக்கும் பொறுப்பு ஜனாதிபதிக்கு மட்டுமே உண்டு என்றும்—அவர் தெரிவித்தார்.

ராமஜென்ம பூமிப் பிரச்சினையைக் கிளப்பி, ரதயாத்திரை செய்து வி. பி. சிங் அரசு கவிழ்வதற்கு மூல காரணராக இருந்தவர் திரு. அத்வானியே என்பது தெரிந்ததே. [அ]

## சிமெந்து...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சிமெந்து கூட்டுத்தாபன பொதுத் தொழிலாளர் யூனியன் பிரதிநிதிகளே கொழும்பு சென்றுள்ளனர்.

ஏற்கனவே கூட்டுத்தாபன பொறியியலாளர்களுக்கும் இடமாற்ற அறிவித்தல் அனுப்பப்பட்டிருந்தது தெரிந்ததே. [ஒ 68]

## யாழ். வாசி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விண்ணப்பத்தில் கையொப்பம் இட்டது போலவே கையொப்பம் இட்டு, கடிதம் கொண்டு செல்பவரின் கையொப்பத்தையும் உறுதிப்படுத்த வேண்டும். கடிதத்தில் விண்ணப்பதாரியின் அடையாள அட்டை இலக்கமும் குறிப்பிடப்பட வேண்டும்.

கடிதத்தைக் கொண்டு செல்பவர் கொழும்பில் குடியகல்வு, குடியமர்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்து கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. [அ-100]

## நயினாதீவு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யப்பட்டது.

இது இவ்வாறு இருக்க நயினாதீவு கடற்படையினர் விசைப்படகில் வந்து குறிகாட்டுவான் பகுதியைநோக்கி அடிக்கடி துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றனர். [இ-125]

## திருப்பழுகா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யும் இராணுவத்தினர் விடுவித்தனர்.

சிவலிங்கம் ரவீந்திரன் [24], சிவலிங்கம் கருணாகரன் [22], சாமித்தம்பி பொன்னையன் [19], வல்லிபுரம் செல்வராசா [30], வினாசித்தம்பி சிங்கன் [28], முத்தன் கிருபைராசா [20], திருப்பழுகாமம் சாஞ்சிபுரம் பாடசாலை அதிபர் பொன்னையா தங்கராசா [55], கந்தையா கணேசன் [18] ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டவர்கள் ஆவர்.

## யாழ். பல்கலை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டுவர அனுமதிக்கப்பட்டுள்ளது.

சிமெந்து, அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகள், மற்றும் பிளாஸ்டிக் கூரைத் தகடுகள் போன்றவற்றை கொண்டுவர அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது.

இதனால் பல்கலைக்கழகத்தில் அவசர கட்டட வேலைகள் தடைப்பட்டுள்ளன. [ஒ 3]

## வங்கி ஆவணங்கள் எடுக்க அனுமதி கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 26

முல்லைத்தீவு நகரப்பகுதியில் உள்ள மக்கள் வங்கியின் ஆவணங்களை எடுக்க கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி மறுத்து விட்டது.

அங்குள்ள ஆவணங்களை எடுத்து வேறிடத்தில் வங்கியை இயக்க, வங்கி நிர்வாகம் முயற்சிகளை மேற்கொண்டது.

ஆனால் அங்கு செல்ல அனுமதிக்க முடியாது என கூட்டுப்படைத்தலைமையகம் தெரிவித்து விட்டதாம். [இ-3]

## குப்பி விளக்கு வெடித்து தம்பதி காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

குப்பிவிளக்கு வெடித்ததில் கணவனும் மனைவியும் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றிரவு சேர்க்கப்பட்டனர்.

நேற்றிரவு 9 மணியளவில் பாஷையூரில் நடந்த இந்தச் சம்பவத்தில் ஏ. ராஜு [21 வயது] அவரது மனைவி ஆர். சூரியா [24 வயது] ஆகியோரே காயமடைந்தனர். [ஒ-3]

## 3 தினங்கள் வாக்களிப்பு

புதுடில்லி, மார்ச் 26

இந்திய நாடாளுமன்றப் பொதுத்தேர்தலுக்கான வாக்களிப்பு மூன்று தினங்கள் நடைபெறும்.

மே மாதம் 18 ஆம் திகதிக்கும் 26 ஆம் திகதிக்கும் இடையில் வாக்களிப்பு இடம்பெறும் என்று பிரதம தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் செய்தியாளரிடம் நேற்றுத் தெரிவித்தார். [ஒ-எ]

## இந்திய சனத்தொகை 84 கோடி!

புதுடில்லி, மார்ச் 26

இந்தியாவின் சனத்தொகை இம் மாதம் முதலாம் திகதி கணக்குப்படி 84 கோடியே 39 லட்சத்து 30 ஆயிரத்து 861 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி — ஆண்களின் எண்ணிக்கை 43 கோடியே 75 லட்சத்து 97 ஆயிரத்து 929 என்றும் —

பெண்களின் எண்ணிக்கை 40 கோடியே 63 லட்சத்து 32 ஆயிரத்து 932 என்று கணக்கிடப்பட்டுள்ளது.

1981 ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பின்படி இருந்ததைக் காட்டிலும் இப்போதைய மக்கள் தொகை $23\frac{1}{2}$ சதவீதம் அதிகரித்து இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [ஒ-எ]

## இணைப்பதிகாரி நியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

ஐக்கிய இராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் யாழ் கிளை இணைப்பதிகாரியாக செல்வி ரெபேக்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் இந்தப் பதவியில் தமிழர் ஒருவரே இருந்து வந்தார். [ஒ-3]

## தூதரக...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விஸா பெற்றுக் கொடுக்கும் தொழிலை மும்முரமாக நடத்தி வருகின்றனர். [ஒ]

## மரண அறிவித்தல்கள்

### பேராசிரியர் சோ. கந்தையா

[கிளிநொச்சி விவசாயபீட பீடாதிபதி]

கிளிநொச்சி விவசாயபீட பீடாதிபதி பேராசிரியர் சோமசுந்தரம் கந்தையா காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சோமசுந்தரம் பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், தேவமணியின் அன்புக் கணவரும், கிறிகரன், கிறிதா, கிறிமேனன், கிறிகாந்த் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற இரத்தினம், பவளம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பரமசாமி, இராமசாமி, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பரமநாதன், செல்வராசா, பிரபாகரி, நேசமலர், மங்கையர்க்கரசி, அன்னலட்சுமி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 7, குறொசெற் ஒழுங்கையில் உள்ள அவரின் இல்லத்திலிருந்து புதன்கிழமை [27-03-91] காலை 7 30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்துக்கு இறுதி அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து காலை 10.00 மணிக்கு தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

7, குறொசெற் ஒழுங்கை,
கச்சேரி—நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ம. புஷ்பராசா

[15935]

### பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை

நயினாதீவு பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை [பொ. க] காலமானார். இவர் காலம்சென்ற பொன்னம்பலம் கனகம்மா [கண்மணி] வின் அன்பு மகனும் கமலாட்சியின் அன்புக் கணவரும் பத்மசோதி, பத்மராணி, பத்மகலைவாணி, கணேசலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் சமக்கிரியைகள் 26 - 3 - 91 செவ்வாய்க்கிழமை மாலை நான்கு [4] மணிக்கு டயஸ் வீதி [வளாக பின் ஒழுங்கை] 30 ஆம் இலக்க இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் வேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
நா. கனகரெட்ணம்
[மைத்துனர்]

''அன்னக்கிளி''
128, கச்சேரியடி, யாழ்ப்பாணம். [15936]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 293/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 26 - 03 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org